# வெலிகெபொல பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 13 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜூலை 29 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய வெலிகெபொல பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிகெபொல பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 176,390 பெறுமதியான நிலையான சொத்துக்கள் குறித்த சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ஹுனுவல வடக்கு மற்றும் பெலன்கந்த நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு உள்ளூர்க் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற ரூபா 9,404,460 கடனானது கடன் கணக்கின் வாயிலாக வெளிக்கொனரப்படவில்லை.

(இ) மூன்று கணக்கீட்டு விடயங்களுக்குரிய 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,112,892 ஆகும். உப பதிவேட்டின்படி மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 1,067,993 ஆகும். இதனால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 44,899 ஆகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 686,904 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,368,151 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 300 | 408 | 108 |
| (ii) | குத்தகை வாடகை | 762 | 828 | 66 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 430 | 661 | 231 |
| (vi) | பிற வருவாய் | 6,546 | 2,305 | 4,241 |

**2.2.2 குத்தகை வாடகை**

2009 தொடக்கம் நிலுவையாக உள்ள ரூபா 11,350 சந்தைக் குத்தகை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,267,658 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 111,126 |

**2.3 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) வெலிகஹபொல பிரதேச சபை உப அலுவலகம் மற்றும் ஸ்வர்ண ஐயந்தி நூலகம் மிகப் பழமை வாய்ந்ததும் பழுத பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதுமான இரு பாழடைந்த கட்டிடங்களில் இருந்தன. இக் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது இரு சந்தர்ப்பங்களில் ரூபா 407,505 செலவழித்து 90 விதி விளக்குத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றுள் 14 பொருத்தப்பட்டிருந்தன. 2012 டிசெம்பர் 11 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது எஞ்சிய 76 வீதி விளக்குத் தொகுதிகளும் பரீசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 ஜூன் 08 ஆந் திகதிய 1386/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மருத்துவ காரணங்களுக்காகவன்றி லீவுக்காக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் கூட்டத்தில் பங்குபற்றியமைக்கான படி வழங்கப்படலாகாது. எனினும், மீளாய்வாண்டின்போது மூன்று அங்கத்தவர்களுக்கு கூட்டத்தில் பங்குபற்றியமைக்காக ரூபா 25,000 வழங்கப்பட்டிருந்தது.

2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெறாது 2012 மே 2 ஆந் திகதியன்று வாழ்த்து மடல்களுக்காக ரூபா 15,120 செலவழிக்கப்பட்டிருந்தது.

2.6 நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டில் 31 செலவின விடயங்களுக்கான ரூபா 2,132,000 மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு முற்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்